OS: 263/2022

Date:12.08.2025

பெயர் : சி.என்.கே.ஏ.பெரியசாமி

வாதி தரப்பு சாட்சி 1.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>

1. நான் 8ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். எனக்கு தமிழ் சரளமாக எழுத, படிக்க தெரியும் என்றால் தெரியும். நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறேன். வட்டிக்கும் கடன் கொடுக்கும் தொழிலும் செய்கிறேனா என்றால் ஆமாம். எனது மனைவி பெயர் பி.மல்லிகா. அவர் இல்லத்தரசியாக இருக்கிறார் என்றால் ஆமாம். நான் சேலம் நீதிமன்றத்தில் கிரையம் செய்து கொடுக்கச்சொல்லி தாக்கல் செய்த சில வழக்குகள் நிலுவையில் இருக்கிறது என்றால் ஆமாம்.

2. நான் இந்த வழக்கை என்னென்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் நான் மனோகரன் என்பவரிடம் நிலம் வாங்கியிருந்தேன். மனோகரனுக்கு நிலத்தை விற்ற முத்துராமலிங்கம் மனோகரனுக்கு விற்ற நிலத்தையே ரகுபதி, இந்திராணி என்பவருக்கும் விற்றுவிட்டதால் எனது சொத்தை மீட்டு தரச்சொல்லி வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன். சுவாதீன பரிகாரம் இந்த வழக்கில் கோரவில்லை என்றால் ஆமாம். அதற்கு காரணம் சுவாதீனம் என்னிடம் தான் இருக்கிறது. நான் சொல்வது போல சுவாதீனம் என்னிடம் இல்லை என்றால் சரியல்ல.

3. என்ன சர்வே எண்ணுக்கு, எவ்வளவு விஸ்தீரணத்திற்காக வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சர்வே எண் தெரியாது, விஸ்தீரணம் 1 ஏக்கர் 92 செண்ட் ஆகும். தாவா சொத்து ஒரே இடத்தில் இருக்கிறதா அல்லது வேறு வேறு இடத்தில் இருக்கிறதா என்றால் ஒரே இடத்தில்தான் இருக்கிறது. தாவா சொத்தின் செக்குபந்தி என்னவென்றால் தெரியாது. தாவா சொத்தில் எத்தனை கிணறுகள், எத்தனை போர்வெல்கள் இருக்கிறது என்றால் ஒரே ஒரு கிணறுதான் இருக்கிறது. போர்வெல் இல்லை.

4. கிணற்றை மதிப்பீடு செய்து அதற்கான கட்டணத்தை பதிவு செய்யும் போதும், மற்றும் நீதிமன்ற கட்டணம் செலுத்தும்போதும், செலுத்தியிருக்கிறேனா என்றால் எனக்கு அதுபற்றி தெரியவில்லை. மனோகரன், முத்துராமலிங்கம் என்பவரிடம் 2003ம் ஆண்டு

பவர் வாங்கி எனக்கு 17.03.2003ம் தேதி கிரைய ஒப்பந்தம் செய்து கொடுத்து 2009ம் வருடம் மூன்றாம் மாதத்தில் கிரையம்செய்து கொடுத்தார். செக்குபந்தி மற்றும் சொத்து குறித்த விவரம் மனோகரனுக்கு மட்டும்தான் தெரியும். தாவா சொத்து குறித்த விவரம் எனக்கு தெரியாதா என்றால் தெரியாது. கிரையம் பெறும்போது பத்திர எழுத்தரிடம் கருத்துரை வாங்கி கிரையம் செய்தேன். எனவே எனக்கு தெரியவில்லை.

5. தாவா சொத்தில் எத்தனை HP மின்மோட்டர் உள்ளது என்ற விவரமும், அது யார் பெயரில் இருக்கிறது என்ற விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எந்த சர்வே எண்ணில் அந்த போர்வெல் அமைந்திருக்கிறது என்ற விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்து ஆதியில் முத்துராமலிங்கத்திற்கு அவரது குடும்பத்தில் ஏற்பட்ட பாகக்கறார் பத்திரப்படி பாத்தியப்பட்டது என்றால் ஆமாம். அதன் அடிப்படையில் முத்துராமலிங்கத்தின் சுவாதீனத்தில் தான் அந்த சொத்து இருக்கிறது என்றால் ஆமாம், அப்போது அவரிடம் இருந்தது.

6. 1ம் பிரதிவாதி முத்துராமலிங்கம் தனக்கு பாத்தியப்பட்ட சொத்தை விற்பனை செய்வதற்காக மனோகரன் என்பவருக்கு வா.சா.ஆ.2 பகர அதிகார ஆவணத்தை 27.02.2003ம் தேதியில் எழுதி கொடுத்தார் என்றால் ஆமாம். ஆனால் அதற்கு முன்பே மனோகரனுக்கு கிரைய ஒப்பந்த பத்திரமும் எழுதி கொடுத்திருந்தார். நான் சொல்வது போல எந்தவொரு கிரைய ஒப்பந்த பத்திரமும் முத்துராமலிங்கம், மனோகரனுக்கு எழுதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

7. நானும், மனோகரன் என்பவரும் அம்மாபேட்டையை சேர்ந்தவர்கள் என்றாலும், உறவினர்கள் என்றாலும் இல்லை. இருவரும் அம்மாபேட்டையை சேர்ந்தவர்கள் தான் ஆனால் உறவினர்கள் அல்ல, நண்பர்கள். தாவா சொத்து எந்த கிராமத்தில் இருக்கிறது என்றால் பவளத்தானூர் குறுக்குப்பட்டியில் இருக்கிறது. தாவா சொத்து இருக்கும் இடத்திற்கும், நான் குடியிருக்கும் இடத்திற்கும் 20 கிலோ மீட்டர் தூரம் இருக்குமா என்றால் இல்லை 30 கிலோ மீட்டர் தூரம் இருக்கும்.

8. மனோகரனுக்கு முத்துராமலிங்கம் கொடுத்த பகர அதிகார ஆவணமான வா.சா.ஆ.2 ல் நானும் சாட்சியாக கையொப்பம் செய்திருக்கிறேன் என்றால் ஆமாம். தாவா சொத்தை விற்பதற்கு தான் முத்துராமலிங்கம், மனோகரனுக்கு பவர் கொடுத்தார் என்றால் ஆமாம். அந்த பத்திரத்தில் மனோகரன் சொத்தை விற்றலோ, ஒப்பந்தம் செய்தாலோ அந்த

தொகைக்கான வரவு, செலவுகளை முத்துராமலிங்கத்திடம் கொடுத்து நேர் செய்து கொள்ளவேண்டும் என்று எழுதப்பட்டிருக்கிறது என்றால் ஆமாம். அதுபோல எனக்கு விற்ற தொகையையும், முத்துராமலிங்கத்திடம் கொடுத்து மனோகரன் முத்துராமலிங்கத்திடம் அதற்கான ரசீதில் கையொப்பம் வாங்கியிருக்கிறார். நான் சொல்வது போல எந்த ரசீதிலும், முத்துராமலிங்கம் கையொப்பம் செய்யவில்லை என்றாலும், அது இந்த வழக்கிற்காக தயாரிக்கப்பட்டிருக்கிறது என்றாலும் சரியல்ல.

9. நான் முத்துராமலிங்கம் மனோகரனுக்கு எழுதி கொடுத்ததாக ஒரு பதிவு செய்யப்படாத கிரைய ஒப்பந்த ஆவணத்தை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் ஆமாம். அந்த பத்திரம் 16.09.2002 ம் தேதி வாங்கப்பட்ட பத்திரம் என்றால் ஆமாம். இந்த ஆவணம் எழுதிய தேதி 20.11.2002 என்றால் ஆமாம். பத்திரம் வாங்கி 3 மாதம் கழித்து தான் கிரைய ஒப்பந்த ஆவணம் எழுதப்பட்டிருக்கிறது என்றால் ஆமாம். இந்த ஆவணம் 2002 ம் ஆண்டு எழுதப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் ஆமாம்.

10. முத்துராமலிங்கம், மனோகரனுக்கு எழுதி கொடுத்த கிரைய ஒப்பந்த பத்திரம் 2003 ம் ஆண்டு எழுதப்பட்டது என்றால் ஆமாம். பகர அதிகார ஆவணம் ஏற்படுத்தப்படுவதற்கு முன்பே கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டதாக உள்ள நிலையில் அந்த பகர அதிகார ஆவணத்தில் கிரைய ஒப்பந்தம் குறித்து எந்த வாசகமும் இல்லை என்றால் சரிதான். உண்மையாகவே பகர அதிகாரம் ஏற்படுத்தப்படுவதற்கு முன்னர் கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டிருந்தால் கிரையம் ஒப்பந்தம் குறித்த வாசகம் கண்டிப்பாக பகர அதிகார ஆவணத்தில் இடம் பெற்றிருக்கும் என்றாலும் அவ்வாறு இடம் பெறாததில் இருந்தே கிரையம் ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்தப்படவில்லை என்று நிரூபணமாகிறது என்றால் சரியல்ல.

11. இந்த வழக்கில் மனோகரனை ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் ஆமாம். அவர் இறந்துவிட்டார். மனோகரன் எப்போது இறந்தார் என்பது குறித்து வழக்கில் சொல்லவில்லை என்றால் ஆமாம். ஆரம்பத்தில் சொல்லவில்லை பின்னிட்டு அவரின் வாரிசுகளை சேர்க்க மனு தாக்கல் செய்தபோது நீதிமன்றம் அதை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது. நான் தாக்கல் செய்த வழக்கிலும், பிரமாணப்பத்திரிக்கையின் 4 ம் பாராவிலும் உண்மையில் பொது அதிகார பத்திரம் ஏற்படுத்திய அன்றே மேற்சொன்ன மனோகரன் தாவா சொத்தை தகுந்த கிரைய தொகை முழுவதும் கொடுத்து கிரையம்

பெற்றார் என்று குறிப்பிட்டு சொல்லியிருக்கும் நிலையில் அவ்வாறு கிரையம் பெற்ற ஆவணம் ஏதாவது நீதிமன்றத்தில் ஒப்படைத்திருக்கிறேனா என்றால் ஆமாம் அவர் கிரையம் பெற்றதற்கு ரசீது கொடுத்திருக்கிறார் அதை நீதிமன்றத்தில் ஒப்படைத்திருக்கிறேன். கிரையம் வாங்கி ஆவணம் என்வசம் இருக்கிறதா என்றால் இல்லை.

12. மனோகரன் கிரையம் பெற்றதாக எனது பிரமாணப்பத்திரிக்கையில் சொல்லியுள்ள சங்கதி தவறு என்றால் சரியல்ல. கிரைய பத்திரம் இல்லை ஆனால் ரசீது இருக்கிறது. வா.சா.ஆ.4 ரசீது முத்துராமலிங்கம், மனோகரனுக்கு எழுதி கொடுத்ததாக சொல்லப்படும் ரசீது என்றால் கிரைய ஒப்பந்தத்திற்கான ரசீது தான் அது. முத்துராமலிங்கத்தின் தந்தை பெயர் வா.சா.ஆ.4ல் இல்லை என்றால் நான் அதை வாங்கவில்லை, மூலப்பத்திரத்தில் என்ன இருக்கிறதோ அதை அடித்து எழுதியிருப்பார்கள்.

13. வா.சா.ஆ.4 எந்த தேதியில் எழுதப்பட்டது என்றும், அதில் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆன ரசீதும், வா.சாஆ.1 கிரைய ஒப்பந்த பத்திரமும், முத்துராமலிங்கத்தை ஏமாற்றுவதற்காக நானும், மனோகரனும் சேர்ந்து ஏற்படுத்தியது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல உண்மையாகவே ஒரு கிரைய ஒப்பந்த பத்திரமும், கிரைய தொகை பெற்றதற்காக ரசீதும் முத்துராமலிங்கம் எழுதி கொடுத்திருந்தால் அவர் பகர அதிகார ஆவணம் எழுதி கொடுத்திருக்க தேவையில்லை என்றாலும், நேரடியாகவே கிரைய ஆவணமே எழுதி கொடுத்திருப்பார் என்றாலும், கிரைய ஆவணமாக எழுதி கொடுக்காமல் பவர் ஆவணமாக எழுதி கொடுத்ததிலிருந்தே கிரையம் ஒப்பந்தமும், ரசீதும் என்னாலும், மனோகரனாலும் வழக்கிற்காக 1ம் பிரதிவாதியின் சொத்தி அபகரிப்பதற்காக தயாரிக்கப்பட்டது என்று தெரியவருகிறது என்றால் சரியல்ல.

14. 17.03.2003ம் தேதி நான் மனோகரனிடம் வா.சா.ஆ.3 கிரைய ஒப்பந்த பத்திரம் எழுதி வாங்கியிருக்கிறேன் என்றால் ஆமாம். வா.சா.ஆ.3 ஆவணம் எழுதும் போது பேசப்பட்ட கிரைய தொகை, கொடுக்கப்பட்ட முன் பணம், நிர்ணயிக்கப்பட்ட காலம் குறித்து சொல்ல முடியுமா என்றால் முடியும். கிரைய ஒப்பந்த தொகை ரூ.2,30,000/-, மற்றும் அட்வான்ஸ் தொகை ரூ.25,000/- நிர்ணயிக்கப்பட்ட காலம் 4 மாதம் ஆமாம்.

4 மாதத்திற்குள் நான் கிரையம் பெறவில்லை என்றால் கிரையம் பெறும் தகுதியை இழந்துவிடுவேன் என்றும், கிரைய ஒப்பந்த ஆவணம் செல்லாததாகிவிடும் என்றும் எழுதப்பட்டிருக்கிறது என்றால் ஆமாம். அவ்வாறு எழுதுவதுதான் நடைமுறை.

15. அந்த 4 மாத காலத்திற்குள் கிரைய தொகையை கொடுத்து கிரையம் செய்து கொள்ள நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல, நான் கிரைய தொகை முழுவதையும் உரிய காலத்திற்குள் கொடுத்துவிட்டதால் நான் அழைக்கும் போது மனோகரன் கிரையம் செய்து கொடுத்துவிடுவதாக சொன்னார். எனவே கிரையம் செய்துகொடுப்பார் என்று விட்டுவிட்டேன். மேற்கண்டவாறு வா.சா.ஆ.3 ல் எழுதப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. அதற்கு காரணம் அவ்வாறு எழுத முடியாது.

16. இந்த விவரத்தை எனது வழக்கிலோ, பிரமாணப் பத்திரிக்கையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். 4 மாத காலத்திற்குள் கிரையம் செய்து கொடுக்கச்சொல்லி மனோகரனுக்கு சட்ட அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரிதான். வாய்மொழியாகதான் பேசிக்கொண்டோம். ஒப்பந்த பத்திரத்தில் கண்டுள்ள 4 மாதம் காலம் முடிவடைந்த உடன் உரிய சட்டக்காலமான மூன்று வருடத்திற்குள் கிரையம் செய்து தரச்சொல்லி எந்தவித வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். அவர் என் நண்பர் என்பதால் போடவில்லை.

17. வா.சா.ஆ.3 ஆவணம் செல்லதகாத ஆவணம் என்றாலும் அது செல்லும் தன்மையை இழந்துவிட்டது என்றாலும், எனவே அந்த ஆவணத்தின்படி என்னால் பரிகாரம் கோர முடியாது என்றாலும் சரியல்ல. முத்துராமலிங்கம் கொடுத்த பகர அதிகார ஆவணத்தின் அடிப்படையில் தான் வா.சா.ஆ.3 எழுதப்பட்டது என்றால் ஆமாம். நான் மனோகரனிடம் செய்த கிரைய ஒப்பந்த உடன்படிக்கை ஆவணமான வா.சா.ஆ.3 பகர அதிகார ஆவணத்தின் மூலமாக எழுதப்பட்டுள்ளதே தவிர நான் வழக்கில் சொன்னது போல மனோகரன் கிரைய ஒப்பந்தம் மற்றும் ரசீது மூலமாக பெற்றுக்கொண்ட கிரையத்தின் படி கிரையதாரர் என்ற முறையில் மனோகரனால் எழுதி கொடுக்கப்படவில்லை என்றால் ஆமாம். அவ்வாறு எழுத முடியாது. பத்திர எழுத்தர் எழுதமாட்டார்.

18. வா.சா.ஆ.3 ஆவணத்தில் 4 மாத காலத்திற்குள் கிரைய ஒப்பந்த தொகை முழுவதையும் கொடுத்ததாக எழுதப்படவில்லை என்றால் ஆமாம். எழுத்து மூலமாக எழுதப்படவில்லை. வா.சா.ஆ.3 கால நீட்டிப்பு செய்தும், எழுதப்படவில்லை என்றால்

ஆமாம். எழுதமாட்டார்கள். நான் கிரைய ஒப்பந்த படி 4 மாத காலத்திற்குள் மனோகரனுக்கு கிரைய தொகை முழுவதையும் கொடுத்துவிட்டதாக சொல்கிறேனா என்றால் ஆமாம். நான் பணம் கொடுத்ததற்கு ஆதரவாக எந்த ரசீதும் மனோகரனிடம் வாங்கி தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம்.

19. பகர அதிகார ஆவணத்தில் கண்டுள்ள சரத்துகளின்படி என்னிடம் மனோகரன் செய்து கொண்டதாக சொல்லப்படும் ஒப்பந்தம் மற்றும் என்னிடம் பெற்றதாக சொல்லப்படும் கிரைய அட்வான்ஸ் தொகை, கிரையத்தொகை, ஆகியவைகளை முத்துராமலிங்கத்திடம், மனோகரன் கொடுத்து ரசீது பெற்றுகொண்டதாக நான் ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. ஒரு சொத்தை பொதுவாக கிரையம் வாங்கும்போது அந்த சொத்திற்கான மூலப்பத்திரங்கள் மற்றும் வில்லங்கத்தை சரிபார்த்து தான் கிரையம் வாங்கவேண்டும் என்றால் இவை எல்லாம் தற்போது தான். அந்த காலகட்டத்தில் இது எல்லாம் பார்க்கமாட்டார்கள். வில்லங்கம் இருந்தது தெரியவந்திருந்தால் சார்பதிவாளர் எனக்கு கிரைய பத்திரமே பதிவு செய்து கொடுத்திருக்கமாட்டார்.

20. மனோகரன் தான் முத்துராமலிங்கத்திடம் பெற்ற பகர அதிகார ஆவணத்தின் அடிப்படையில் வா.சா.ஆ.6 கிரைய பத்திரத்தை எனக்கு எழுதி கொடுத்திருக்கிறார் என்றால் ஆமாம். இந்த ஆவணம் எழுதும் போது வில்லங்கம் இருக்கிறதா என்று சரிபார்த்துதான் எழுதப்பட்டதா என்றால் இல்லை. தாவா சொத்தை அபகரிக்கவேண்டும் என்பதற்காக நானும், மனோகரனும் சேர்ந்து ஏற்படுத்தி கொண்டதுதான் 24.03.2009ம் தேதியிட்ட வா.சா.ஆ.6 கிரைய ஆவணம் என்றாலும் உண்மையாகவே கிரையம் செய்திருந்தால் வில்லங்கம் பார்த்துதான் நான் கிரையம் செய்திருப்பேன் என்றாலும், வில்லங்கம் பார்க்காமல் கிரையம் செய்தேன் என்று சொல்வதிலிருந்தே நானும், மனோகரனும் சேர்ந்து சொத்தை அபகரிக்க ஏற்படுத்தி ஆவணம் தான் வா.சா.ஆ.6 கிரைய ஆவணம் என்று தெரியவருகிறது என்றால் சரியல்ல.

21. முத்துராமலிங்கம், மனோகரனுக்கு கொடுத்த பகர அதிகார ஆவணத்தை 22.12.2008ம் தேதி இரத்து செய்துவிட்டார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. இரத்து செய்வது குறித்து மனோகரனுக் கும் நோட்டீசும் அனுப்பப்படவில்லை, எனவே தெரியவில்லை. நோட்டீஸ் அனுப்பியிருந்தால் மனோகரன் எனக்கு கிரையம் செய்து

கொடுத்திருக்கமாட்டார். மனோகரனுக்கு நேரடியாக தகவல் சொல்லிவிட்டுதான் இரத்து செய்தார் என்றால் அது பொய் அதற்கு ஆதாரம் எதுவும் இல்லை. முறைப்படி மனோகரனுக்கு தகவல் தெரிவித்துவிட்டுதான் முத்துராமலிங்கம் பகர அதிகார ஆவணத்தை இரத்து செய்தார் என்றாலும், அந்த விபரம் எனக்கும் மனோகரனுக்கம் நன்கு தெரியும் என்றாலும், எனவே தான் பகர அதிகார இரத்து ஆவணத்தை நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல.

23. முத்துராமலிங்கத்தின் நலனுக்கு விரோதமாக மனோகரன் நடந்துகொண்டதால் தான் முத்துராமலிங்கம் மனோகரனுக்கு கொடுத்த பவரை இரத்து செய்தார் என்றால் சரியல்ல. மனோகரனுக்கும், அறிவிப்பு கொடுக்கவில்லை எனக்கும் அறிவிப்பு கொடுக்கவில்லை. எனது இரத்து செய்தது செல்லாது. இரத்து ஆவணம் ஏற்படுத்தும்போதே மனோகரனுக்கு தகவல் தெரிவித்துவிட்டுதான் ஏற்படுத்தப்பட்டது என்றால் மேற்படி ஆவணம் செல்லதகுந்த ஆவணம் என்றால் சரியல்ல. இந்த பவர் இரத்து ஆவணம் குறித்த விவரம் வில்லங்கச் சான்றிதழில் பதிவு செய்யப்பட்டிருக்கும் என்றால் ஆமாம்.

24. பவர் அதிகார ஆவணத்தை இரத்து செய்து விட்டு முத்துராமலிங்கமும், அவரது வாரிசுகளும் சேர்ந்து 4, 5 பிரதிவாதிகளுக்கு ஒரு கிரைய ஆவணம் எழுதி கொடுத்திருக்கிறார்கள் என்றால் ஆமாம். இந்திராணியும், ரகுபதியும் வில்லங்கம் போட்டு பார்த்திருந்தலேயே மனோகரன் பெயரில் இருக்கும் கிரைய ஒப்பந்த பத்திரமும், பவர் பத்திரமும் அதில் தெரிந்திருக்கும் என்று சாட்சி கூறுகிறார். மேலும், ரகுபதி ஒரு பத்திர எழுத்தர் என்றும் அவருக்கு அனைத்து தெரியும் என்றும் சாட்சி கூறுகிறார்.

25. பத்திரம் இரத்து செய்ததை தெரிந்துகொண்ட பின்னரும் என் மீது இருந்த கிரைய ஒப்பந்த பத்திரம் செல்லுதன்மையை இழந்துவிட்டதை தெரிந்து கொண்டும் தான் ரகுபதியும், இந்திராணியும் கிரையம் பெற்றார்கள் என்றால் சரியல்ல. அவர்கள் உண்மையான கிரையம் பெற்றிருந்தால் சார்பதிவாளர் எங்களுக்கு கிரையம் செய்து கொடுத்திருக்கமாட்டார். 4, 5 பிரதிவாதிகள் பெற்ற கிரையும், கிரைய இரத்து பத்திரமும், 2008ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட நிலையில் அதற்கு பின்னிட்டு 2009ம் ஆண்டு தான் நான் கிரையம் பெற்றிருக்கும் நிலையில் ஏற்கனவே 4, 5 பிரதிவாதிகள் பெயரில் கிரையம் இருப்பதை தெரிந்தே சொத்தை அபகரிப்பதற்காக போலி கிரைய

பத்திரம் ஏற்படுத்தியிருக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு 2021ம் ஆண்டு மாவட்ட பதிவாளரிடமிருந்து எனது பத்திரத்தை இரத்து செய்ய சொல்லி அழைப்பாணை வந்தபோது தான் தெரியவந்தது உடனே வழக்கு தாக்கல் செய்துவிட்டேன்.

26. எனக்கு கிரையம் செய்து கொடுத்த தேதியில் எனக்கு கிரையம் செய்து கொடுக்க மனோகரனுக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும், அவர் 1ம் பிரதிவாதி முத்துராமலிங்கத்தில் அதிகாரம் பெற்ற முகவர் என்ற தன்மையும் கிரைய தேதியில் இழந்துவிட்டதால் எனக்கு ஏற்படுத்தி கொடுத்த கிரைய பத்திரம் சட்டத்தின் பார்வையில் செல்லாத ஒன்று என்றால் சரியல்ல. செல்லாத ஆவணத்தின் அடிப்படையில் பிரதிவாதிகளின் மீது பரிகாரம் கோர எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. முத்துராமலிங்கத்திடம் தகுந்த மறுபயன் செலுத்தி தாவா சொத்தை 4, 5 பிரதிவாதிகள் கிரையம் பெற்று தாவா சொத்தின் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருந்து வருகிறார்கள் என்பதால் எனக்கு இந்த வழக்கில் எந்தபரிகாரமும் கிடைக்கதாகாது என்றாலும், எனது வழக்கும் தள்ளுபடி செய்யதக்கது என்றாலும் சரியல்ல.

27. 4, 5 பிரதிவாதிகள் கிரையம் பெற்ற பின்னர் வருவாய் துறை ஆவணங்கள் அவர்கள் பெயரில் மாறிவிட்டது என்றாலும், தாவா சொத்தை 4, 5 பிரதிவாதிகள் தான் தற்போது அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் ஏற்படுத்தியகிரைய ஆவணத்தின் அடிப்படையில் பட்டா மாறுதல் வேண்டி நடவடிக்கை எடுத்தேனா என்றால் ஆமாம். கிரையமாகி இரண்டு மாதம் கழித்து நடவடிக்கை எடுத்தேன். இரண்டு மாதம் கழித்து போய் கேட்டபோது கிராம நிர்வாக அலுவலர், ரகுபதி பட்டா பெற்றிருப்பதாகவும், எனவே எனக்கு பட்டா கொடுக்கமுடியாது என்றும் சொன்னார். ரகுபதி உள்ளூர்காரர் என்பதால் தனது செல்வாக்கை பயன்படுத்தி தன் பெயருக்கு பட்டாவை மாற்றிகொண்டிருக்கிறார்.

28. தாவா சொத்தின் சுவாதீனத்தில் நான் இருக்கிறேன் என்பதை நிரூபணம் செய்ய ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லையா என்றால் இல்லை அதற்கு காரணம் எந்த சொத்தை வாங்கினாலும் விற்பதற்குதான் வாங்குவேன். எனவே, பட்டா போன்றவைகளை மாற்ற நடவடிகை எடுக்கமாட்டோம். கிரையம் பெற்றவுடன் சுவாதீனத்தை மட்டும் எடுத்துக்கொள்வோம். அடிக்கடி போய் அந்த இடத்தை பார்த்து வருவோம். நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

(ஒப்பம்/-T.மாலதி),
சார்பு நீதிபதி,
ஓமலூர்.